1978 மார்ச் 3]

தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை சாலையில் மேம்பாலம்

* 377 வினா— திரு டி. எம். தைலப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை சாலையில் தஞ்சாவூர் நகராட்சி எல்லைக்கருகில் உள்ள இரயில் பாதைகளைக் கடக்க மேம்பாலம் அமைக்கும் உத்தேசம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : இல்லை.

[முற்பகல் 10—00]

திரு டி. எம். தைலப்பன் : தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை பஸ் ரூட்டில் தஞ்சை-கும்பகோணம் இரயில் பாதையும் தஞ்சை-நாகப்பட்டினம் இரயில் பாதையும் இருக்கிறது. அதைக் கடந்து செல்ல ஆயிரக்கணக்கான பஸ்களும், லாரிகளும், மாட்டு வண்டிகளும் வெகுநேரம் காத்திருந்து செல்ல வேண்டியிருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டு மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்புகொண்டு அந்த மேம்பாலத்தை உடனடியாக அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மேம்பாலத்தை அமைப்பதற்கு சுமார் 35 லட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. மத்திய அரசு இதில் 50 சதவீதம் செலவை ஏற்க வேண்டியுள்ளது. இதுபற்றி தீர ஆராய்ந்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை சற்று நீட்டிக்கிறேன்.

உளுந்தூர்பேட்டை அருகே மேம்பாலம்.

*378 வினா—திரு துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் வரும் உளுந்தூர்பேட்டை ரயில்வே பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் விபரம் என்ன?